# ஏற்றம்



## ඒට්‍රම්

## Aetram



உள்ளூர் ஆளுகையை மேம்படுத்தி
உன்னத சேவையை வழங்கிடுவோம்

# ஏற்றம்

ඒට්ටම්

**Aettam**

Indicator for Local Government Services

உள்ளூராட்சி சேவைகளின் குறிகாட்டி

*தளம் : 01* *படி : 01* *ஜூலை 2011*




## Message from His Excellency the president Mahinda Rajapaksa

It is with great pleasure that I pen this message to mark the occasion of the launching of the first stage of the Gama Neguma - Inter Divisional Rural and Small Township development initiative for the North East Provinces.

local Authorities can play an effective role in development, reconciliation and promoting better understanding between our communities. As elected bodies they provide greater opportunities for the people to participate effectively in the Local level decision making process and in the development efforts.

The Inter Divisional Rural and Small Township development initiative for the North East Provinces envisages developing the service delivery system of the local authorities in order to provide an efficient service to the people and to strengthen their capacities to improve their living conditions.

I wish that this project would accelerate the development of the North and bring prosperity to the people of the area.

**Mahinda Rajapaksa,**
**President.** **11th July, 2011**



## Message from Hon.Basil Rajapaksa, Minister of Economic Development

It gives me great pleasure to issue this message on the occasion of the ceremonial launching of the Gama Neguma-Inter Divisional Rural and Small Township development initiative for the North East Provinces.

After the achievement of peace the Government has taken several meaningful steps to improve the living conditions of the people of the North and created opportunities for them to strengthen themselves and to be the active partners with the state. The Inter Divisional Rural and Small Township development initiative which is being launched through local authorities in the Northern Province would give an additional dimension to the efforts of the government in developing the productive capacity of the rural poor in the Northern Province.

Local Authorities are democratically elected grass root level organizations which reflect the needs aspirations of the people of the area. Their project has the objective of strengthening the services delivered by the Local Authorities and there by create a conductive environment for the people of the area to engage in economic activities.

The government of Sri Lanka has arranged the financing of the project through a specific investment loan from the World Bank. The project period extents up to three years and an amount of Rs.3627million would be invested to improve the services of the Local Authorities in the North.

Mahinda Chinthana envisages prosperity for all Sri Lankans and this project has been formulated to restore and develop the Local Authorities and to enhance their service delivery. I am sure this project will usher in a new era in the development of Local Authorities and bring prosperity to the people of the Northern Province.

**Basil Rajapaksa,**
**Minister of Economic Development** **11th July, 2011**



## கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வாழ்த்து செய்தி

உள்ளூர் சேவை மேம்பாட்டின் மூலம் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்கள் உன்னத சேவையை நுகர தலைப்படும் உத்தமமான வேளையில் கருத்திட்டத்தின் வெற்றிக்காக வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

இக்கருத்திட்ட அங்குரார்ப்பணமானது மகிந்த சிந்தனையை அடியொற்றி வடக்கின் வசந்தத்தை மக்கள் அனுபவிக்க தளமிட்டு தருகிறது. உள்ளூராட்சியின் மகோன்னத தத்துவங்கள் செயல்திறன் மிக்க சேவை மூலமாக மிளிர்வதன்மூலம் ஜனநாயக விழுமியங்களை யதார்த்தமாக்குவதற்கு உள்ளூர் சேவை மேம்பாட்டுத்திட்டம் வழிவகுத்து தந்திருப்பதானது வடமாகாண மக்களுக்கு இலங்கை அரசின் நல்லெண்ண தூதாக கருதப்படவேண்டும்.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப சேவை வழங்கலுக்கான புதிய பங்கேற்பு நன்முயற்சி இத்திட்டத்தினூடே அரசின் கடமைக்கு மக்கள் தோள் கொடுக்கும் சான்றாக மிளிரும் இத்தருணத்தில் வடமாகாண உள்ளூராட்சியின் தூண்களாம் அமைச்சு, திணைக்களம் மற்றும் திட்டப்பிரிவினை வாழ்த்துவதுடன் திட்டத்தின் பலன் வடமாகாணத்தின் ஏற்றத்திற்கு கட்டியம் கூறவேண்டி நல்வாழ்த்துக்களை நவில்கிறேன்.

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
**பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு** *11 ஜுலை, 2011*



## கௌரவ அமைச்சர் றிஷாட் பதியுதீன் அவர்களின் வாழ்த்து செய்தி

மக்களாட்சி மலர்ந்துள்ள நம் நாட்டின் வடபுலத்தில் மக்கள் சேவைக்கான உள்ளூராட்சியின் மகத்துவத்தை எடுத்தியம்பும் உள்ளூர் அபிவிருத்தி சேவை மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கும் அங்குரார்ப்பண நிகழ்விற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். ஜனநாயக விழுமியங்களை எடுத்தியம்பும் உள்ளூராட்சியின் மகோன்னத நிலைக்கு இக்கருத்திட்டம் ஓர் எடுத்துக்காட்டு என்பதில் மிகை-யேதுமில்லை.

பொய்யாமொழிப்புலவர் வள்ளுவரின் அரசியல் அதிகார குறள் மூலம் சிறந்த அரசின் நற்பண்பை இவ்விதம் எடுத்தியம்புகிறார்.

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல அரசு”**

மகிந்த சிந்தனையின் மாண்புறு மக்களாட்சி தத்துவம், வடக்கின் வசந்தம் மென்மேலும் சிறக்க பொருளாதார நலனோன்பு திட்ட இயற்றலுக்கும் அதன்வழி பெற்ற நலன் காத்து மக்கள் தம் கடமை உணர்ந்து செயற்பட முன்னோடி திட்டத்தை ஈந்து வடபகுதி மக்கள் தம் சேவை நிறைவை வழிப்படுத்த ஓர் கருத்திட்டத்தை இன்று அங்குரார்ப்பணம் செய்வதில் பெரும்மகிழ்வு கொள்கிறேன். அரசின் வடபகுதி மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாட்டை நன்றியறிதலுடன் ஏற்பதோடு ஜனநாயக வரையறைக்குள் மக்கள் தம் செயற்பாட்டை வலியுறுத்தும் இச்செயற்திட்டம் சிறந்த பெறுபேற்றை வழங்கிட எனது நல்லாசிகளை வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

இனமத, பிரதேச பேதமற்ற மக்கள் மாண்பும் உள்ளூராட்சியின் மகத்துவமும் வெளிப்பட உதவும் இத்தகைய மக்கள் பங்கேற்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் மூவினமும் ஒன்றிணைந்து பாரினில் எம் தேசம் சிறந்தோங்க இத்திட்டத்தின் வெற்றி வழிகோல வேண்டும் என வாழ்த்தி வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

*றிஷாட் பதியுதீன்*
**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்**

***11 ஜூலை, 2011***



## Message from Hon.Governer Major General G.A.Chandrasiri

I am delighted to issue this message on the occasion of the launching of the 1st phase of the Inter Divisional Rural and Small Township development initiative for the North East Provinces (Gama Neguma)

In the Northern Province with the dawn of peace several effective steps have been taken to reconstruct the infrastructure facilities, establish effective administrative and service delivery arrangements and to restore and develop livelihoods.

Through 'Vadakkin Vasantham' and other government programmes a number of development projects were implemented in the North to improve infrastructure facilities and to uplift the living conditions of the people. By the consistent efforts of the government a peaceful environment has been established throughout the Northern Province. There has been a boost in the local economy and sharp increase in the economic activities in the Northern Province.

The Local Authorities are democratically elected institutions which have been granted a wide range of functions including the construction and maintenance of roads, drainage and culverts, public buildings, markets, rural water supply, libraries etc. Due to financial constraints the Local Authorities are unable to perform their functions effectively.

Through the Inter Divisional Rural and Small Township development initiative the government intends to focus on Local Authorities and to strengthen their capacity in delivering their services. The project has planned for an investment of Rs.3627 million over a project period of three years. Construction of rural roads, drainage systems, water supply, markets, play grounds etc. will be under taken through this project . The Local Authority projects to be implemented have been selected through involvement of the people of the respective Local Authorities.

At the first phase of this project 40 sub project proposals have been approved

and work will commence in 13.07.2011. The total investment on the 40sub projects would amount to Rs.302.95million. At the second P.P.C meeting held on 28.06.2011 eighty sub project proposals have been approved and the projects with an investment of Rs.665.95 million will commence soon.

The project has been a blessing to the Local Bodies and would greatly benefit the people of the area. I thank Hon.Basil Rajapaksa, Minister of economic development for the initiatives taken to formulate and introduce this project to the North. I thank His Excellency the president for his continuous support and encouragement in our development efforts.

I wish the project all success.

**Maj. Gen. GA Chandrasiri**
**Governor**
**Northern Province** **11th July, 2011**

# " ஏற்றம்" அறிமுகவுரை

அனைவருக்கும் ஏற்றத்தின் முதலிதழ் வணக்கங்கள்.

வடமாகாண உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் பற்றிய தகவல்கள் பொதுமக்களை இலகுவாகச் சென்றடையக்கூடியவாறு சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் செயல்வடிவமாக ஏற்றம் சஞ்சிகை உங்கள் கைகளில் தவழ்கிறது.

குட்டிப் பாராளுமன்றம் என அழைக்கப்படும் கட்டமைப்பைக் கொண்டுள்ள உள்ளூராட்சி அமைப்பானது, பிரதேசத்திலிருந்து கிடைக்கப்பெறும் வளங்களினைப் பயன்படுத்தி தமது பகுதிகளை விருத்திசெய்யத்தக்க அதிகாரங்களைக்கொண்டதும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதுமான மூன்றாவது நிலை ஜனநாயக அமைப்பாகும்.

வட மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் மறுசீரமைக்கப்பட்டு, சேவைகள் மேம்படுத்தப்பட்டு மக்கள் பங்களிப்புடனான நிலையான அபிவிருத்தியை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்துள்ள இவ்வேளையில் " உள்ளூர் ஆளுகையை மேம்படுத்தி உன்னத சேவையினை வழங்குவோம்" எனும் மகுட வாக்கியத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை வெளிக்காட்டும் ஓர் குறிகாட்டியாக " ஏற்றம்" திகழவுள்ளது.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி வழங்கல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுவரும் வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தினூடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் பொது மக்களுக்கு அவர்களது பொறுப்புக்களை உணர்த்தி சேவைகளினதும் அபிவிருத்தித்திட்டங்களினதும் விளைவுகளை துல்லியமாக எடுத்துக்காட்டி மக்களையும் மன்றங்களையும் இணைக்கும் பாலமாக " ஏற்றம்" அமைந்திடும்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் நான்காண்டுத் திட்டமாக முன்னெடுக்கப்படும் உள்ளூர்

சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் மக்கள் பங்களிப்புடனான ஆரம்ப நாளில் இச்சஞ்சிகை வெளியீடு பொருத்தமானதாக அமையும் என நம்புகின்றோம்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் எண்ணத்தை வண்ணமாக்கி மிகக்குறுகிய காலத்தில் இச்சஞ்சிகையை வெளியிட உதவிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இரண்டாம் படியில் சந்திக்கும் வரை...

அன்புடன்,
வெளியீட்டுக்குழு


ஏற்றம்

உள்ளூராட்சி சேவைகளின் குறிகாட்டி

தளம்: 01 படி: 01

**வெளியீட்டுக்குழு:**
திரு.மே.சாந்தசீலன்
திரு.க.சௌந்தரராஜன்
திருமதி.சி.சுஜீவா
திரு.ச.பிரசாத்
திரு.சி.தயாபரன்
திருமதி.கு.துஷ்யந்தி

**தொகுப்பும் வடிவமைப்பும்:**
திரு.ச.பிரசாத்

**வெளியீடு:**
வட மாகாண உள்ளூராட்சி
முகாமைத்துவக்குழு

## ஏற்றத்தின் உள்ளே...

1. உள்ளூராட்சி மன்ற சேவைகளில் மக்கள் பங்களிப்பின் பிரிணாமம் 01
2. உள்ளூர் சேவைகள் மேம்பட ஒரு திட்டம் 04
3. எங்கட றோட்டும் திருத்தப் போறீனம் 05
4. சேர்ந்து செயற்படுவோம் வாரீர் 07
5. உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் 08
6. உள்ளூராட்சியின் மாட்சி 10
7. நாங்களும் ஒத்துழைக்க வேணும்.. 11
8. புத்தகசாலை வேண்டும் புது வாழ்வு காண 17
9. நூல் போற்றுதும் நூலகம் போற்றுதும் 17
10.தெளிவு பிறக்கிறது 18

## உள்ளூராட்சி மன்ற சேவைகளில் மக்கள் பங்களிப்பின் பரிணாமம்

வடமாகாண உள்ளூராட்சி
முகாமைத்துவக்குழு.

மகிந்த சிந்தனையில் ஒன்றான கிராமங்களின் வளர்சியினூடாக தேசத்தின் உத்தம வளர்ச்சி என்ற கோட்பாட்டின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் துரித அபிவிருத்தியை மேற்கொள்ளும் நோக்கில் உருவான திட்டமே உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டமாகும் இத்திட்டம் இலங்கையின் ஏனைய மாகாணங்களைப் போல் வடக்கு கிழக்கு மாகாணங்களும் திகழ வேண்டும் என்பதற்காக நவீன மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துப் பாதைகள், கல்வி வசதிகள், சுத்தமான சுகாதாரமான சுற்றுச் சூழல், தூய்மையான குடிநீர் கிடைக்கும் நகரமாக அனைத்து பகுதிகளையும் மாற்றியமைக்கும் நோக்கில் உலக வங்கியினதும், இலங்கை அரசினதும் அனுசரணையுடனும், நிதிவழங்கலிலும் நான்கு ஆண்டுகளுக்கு நன்கு திட்டமிடப்பட்டு உள்ளூர் சேவைகளை மேம்படுத்த உருவாக்கப்பட்டதே வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டமாகும்.

இத்திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியினை உலக வங்கி கடனாக வழங்குகின்ற போதும் இந்நிதியை திருப்பிச் செலுத்த வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் உரியதாகும். இந்நிதியானது 2011ம் ஆண்டு தொடக்கம் 2013ம் ஆண்டு வரை மூன்று பகுதியாக வழங்கப்படவுள்ளது. வடமாகாணத்தில் 1ம் ஆண்டுக்கு இற்றைவரை 122 கருத்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு முதற்கட்டமாக 41 வேலைகளும் 2ம் கட்டமாக 81 வேலைகளும் செயற்படுத்தப்படவுள்ளது. முதற்கட்ட வேலைகள் இன்று (13.07.2011) முதல் ஆரப்பிக்கப்படுகிறது.

**1ம் ஆண்டு - 1088 மில்லியன்**
**2ம் ஆண்டு - 1632 மில்லியன்**
**3ம் ஆண்டு - 907 மில்லியன்**

என்ற வகையில் மொத்தம் 3,627 மில்லியன் ரூபாய்க்கான வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றி பூரணமான பயன்பாட்டை பொற்றுக்கொள்ளவேண்டியது அரச நிர்வாகிகளினதும், பொதுமக்களினதும் முக்கிய கடமையாகும் இத்திட்டம் வெற்றிபெறுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும்.

மேலும் உள்ளூராட்சி சபைகளுக் கிடையே உள்ள கிராம சேவகர் பிரிவுகள் சிலவற்றை ஒன்றாக்கி ஒரு கொத்தணிக்குள் உள்ளடக்கி அந்தப் பகுதி மக்கள் அனைவருக்கும்

இத்திட்டம் பற்றிய விளக்கத்தினை தெளிவுபடுத்தி பொதுமக்கள் அனைவரையும் பங்காளர்களாகவும், கண் காணிப்பாளர்களாகவும் ஆக்கவேண்டும். இனங்காணப்பட்ட பிரச்சனைகளை முன்னுரிமை அடிப்படையிலும், அனைவரின் விருப்பத்தோடும் தெரிவு செய்து வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். திட்டமிட்ட செயற்பாடுகள் யாவும் நடைமுறைப்படுத்தப்படும்போது மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் கண்காணிக்கப்படும்.

இவ்வேலைத்திட்டங்களின் முக்கிய பங்குதாரர்களும் பயனாளிகளும் பொதுமக்களே ஆவர். பொதுமக்களின் பங்களிப்புடனேயே அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் கருப்பொருளாகும். பொதுமக்கள் தமது பிரதேசத்தின் முன்னேற்றம் தொடர்பில் அக்கறை கொள்ளாவிட்டால் எந்தத் திட்டமுமே வெற்றி பெறாது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

பொதுமக்கள் தங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளை ஒவ்வொரு நாளும் கண்காணிக்க வேண்டும். வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படு முன்னர் அவ்வேலை தொடர்பான தகவல்கள் வேலை நடைபெறவுள்ள பகுதியில் விளம்பரப் படுத்தப்படும். அதில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களை வாசித்து



அறிந்து வைத்திருத்தல் வேண்டும். திட்டத்தின் காலப்பரப்பு, ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு, பாவிக்கப்படவுள்ள மூலப்பொருட்கள், ஒப்பந்தகாரர் விபரம் போன்ற விபரங்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும். மக்களால் மக்களுக்காக பிரதேசத்தின் அபிவிருத்திக்காக செய்யப்படும் வேலைத்திட்டம். இவ் வேலைத்திட்டங்களின் குறை நிறைகள் தொடர்பாக உரியவர்களிடம் கலந்து பேசி முழுமையான பயனைப் பெற்றுக் கொள்ளும் அனைத்து உரிமையும் பொதுமக்களுக்கு உண்டு. அதுமட்டு மின்றி வேலைத்திட்டங்கள் நிறை வேறிய பின்னர் அவற்றினை தமது சொத்தாகக் கருதி நல்லமுறையில் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் பொது மக்களையே சார்ந்ததாகும்.

இத்திட்டத்தில் மிகவும் பிரதானமாக தெளிவுபடுத்த வேண்டிய விடயம் பெண்களின் பிரசன்னம் அல்லது பெண்களின் பங்குபற்றல் ஆகும். முழு-மையான அபிவிருத்தி எனும்போது அதில் பெண்களின் பங்களிப்பு இன்றி யமையாததாகும். அவர்களின் கருத்து விருப்பம் என்பன முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டியவையாகும் அந்தவகையில் இச்செயற்றிட்டமும் பெண்களின் பங்களிப்பை மிகவும் வலியுறுத்தியுள்ளது. நின்று நிலைக்கும் நீடித்த அபிவிருத்தியை பிரதான நோக்காகக்கொண்டுள்ள இவ்வகைத் திட்டங்களை வெற்றியடையச்செய்வது பொதுமக்களின் பூரண பங்களிப்பிலும் பொறுப்புணர்விலுமே தங்கியுள்ளது.

இத்திட்டத்தில் உள்ளடக்கப்படுபவை:

**வீதிகள்**: கிராமிய வீதி, பாலங்கள், மதகுகள், கால்வாய்கள் போன்றவை மூலமான போக்குவரத்து பாதைகளை சீர்செய்து கிராமங்களை இணைத்தல்.

**சந்தை வசதிகள்**: வாராந்த சந்தை, கடைகள், பொதுச் சந்தைகள், களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல்,

**கிராமிய மின்வசதிகள்**: சூரிய ஒளி மூலமான கிராம மின் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சுகாதார நிலையங்களுக்கான மின்வசதிகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் சமூக செயற்பாடுகளுக்கு உதவுதல்.

**சமூகக் கட்டமைப்பு வசதிகள்**: நூலகங்கள், சனசமூக நிலையங்கள் முன்பள்ளிகள், மயானங்கள், இடு காடுகள், பொதுப்பூங்கா, வாகனத் தரிப்பிட வசதிகள்.

**ஆரோக்கியம்**: ஆயுர்வேத வைத்திய சாலைகள், தாய் சேய் நிலை யங்களை ஸ்தாபித்து மக்களிற்கான ஆரோக்கிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**சூழல் பாதுகாப்பு**: குடிநீர் பெறக்கூடிய இடங்களை பாதுகாத்தல்.

**ஏனையவை:** விளையாட்டு மைதானம், வாகனத்தரிப்பிடம், துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம், மதில் சுவர், காவலாளி தரிப்பிடம், பூங்காக்கள், சிறுவர் விளையாட்டு மைதானம்

ஒவ்வொரு பகுதி மக்களுக்கும், பிரதேசங் களுக்கும் அவர்களது தேவைகள் வேறுபட்டு இருக்கின்றன உ-ம்: மீளக் குடியமர்ந்த மக்களிற்கு வாழ்வாதாரப் பிரச்சனையாக குடியிருப்பதற்கு வீடும், மலசலகூடம் அமைத்தலும், கிணறுகளைப் புனரமைத்தலுமே பிரதான தேவை யாவுள்ளது.

இவ் உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனு சரணையுடன் வடமாகாண கௌரவ ஆளுனர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களூடாக துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் இவ் வேலைத்திட்டங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டு அதற்கான நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப் பட்ட வேலைத்திட்டங்களை முறையாக மேற்கொள்வதற்கு பொதுமக்களையும் சமூகமட்ட நிறுவனங்களையும் இணைத்து செயற்படுவதுடன், எமது பிரதேசத்தை அபிவிருத்திப்பாதையில் இட்டுச்செல்ல நாம் அனைவரும் ஒன்றுபட்டு பாடுபடுவோம் என்பதுவே. மகிந்த சிந்தனையின் கோட்பாடும் ஆகும்.

முதலாம் கட்ட உப முன்மொழிவு மீளாய்வு கூட்டத்தில், உள்ளூராட்சி மன்றங்களால் சமர்பிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வேலைகள் இன்று (03.07.2011) உத்தியோகபூர்வமாக ஆரப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் காலங்களிலும் அர்பணிப்போடும்

## உள்ளூர் சேவைகள் மேம்பட ஓர் திட்டம்

*சிதைந்து போன எமது பிரதேசங்களின்*
*சிதைவுகள் அனைத்தும்*
*சீர்பெறவே வந்த நல்திட்டம்*
*"நெல்சிப்" மேம்பாட்டுத் திட்டம்*
*மகிந்த சிந்தனையில் உதயமானது*
*வடக்கின் வசந்தம் வாயிலாக*
*எம் மக்களின் வாசலுக்கும் வந்தது.*
*துரிதஅபிவிருத்தியை நோக்கிய*
*பயணத்தில்*
*உலகவங்கியும், இலங்கை அரசும்*
*அனுசரணை வழங்க*
*நான்கு ஆண்டுகள் கொண்ட திட்டம்*
*வடக்கின் அபிவிருத்தியை சுட்டி*
*நிற்கும்*
*இதில் பங்காளிகளும் மக்களே*
*பயனாளிகளும் மக்களே*
*கண்காணிப்பவர்களும் நீங்களே*
*பாதுகாப்பவர்களும் நீங்களே*
*இத்திட்டத்திற்கு வலுச்சேர்த்து வளம்*
*பெறுவீர்*

திரு.சி.சிவதாஸ்

# ' எங்கட றோட்டும் திருத்தப் போறீனம்...'

திரு.வேலும்மயிலும் கனகநாதன்,
பொது மகன், சங்குவேலி

## ஓர் அனுபவ பகிர்வு

நான் விவசாயம் செய்யிறன். நாங்கள் பரம்பரையா விவசாயந்தான், எங்கட... குடும்பங்கள் விவசாயஞ் செய்துதான் சீவியத்தை கொண்டு நடத்துறம். நான் எண்டில்ல... இந்தப்பிதேசத்தில் அனேகமா எல்லோரும் விவசாயத்தை நம்பியிருக்கிறம். ஆனால் பாருங்கோ,

சந்தைக்கு சாமான்களைக் கொண்டு போறத்துக்கும் வாறத்துக்கும் வசதியான றோட்டு இல்ல. கனகாலமா குண்டும் குழியுமா கிடக்குது, கல்லுகள் குத்தி சைக்கிள் காத்துப்போனா மரக்கறிகளை நேர காலத்திற்கு சந்தைக்கு கொண்டு போக ஏலாது. இதை ஆரிட்ட சொல்லுறது எண்டும் தெரியேல்ல. கஸ்ரப்பட்டுக் கொண்டிருந்தோம் அண்டைக்கு சிலபேர் வந்து வாசிகசாலையில் கூட்டம் இருக்கு வாங்கோ எண்டு சொல்லிட்டுப் போச்சினம். வேறவேலயில்ல உவன் களுக்கு எண்டு நான் போகல, பிறகுபாத்தா எங்கட வீசியில வேல பாக்கிற கிளாக்கர் வந்து கூப்பிட்டார். அந்த மனுசனை பகைச்சுக்கொள்ள ஏலுமே! பின்னப்போவம் என்று போனனான். அங்க கூட்டத்துக்கு எங்கட பகுதிச் சனங்கள் எல்லாம் வந்திருந்தது. ஆப்பதான் பாத்தன் எங்கட சந்தையடியில நான் காணுற உத்தியோகத்தர்மார் எல்லாரும் வந்திருந்திச்சினம்.

உள்ளூராட்சியை மேம்படுத்திற புதுத் திட்டம் வருகுது, செய்ய வேண்டிய முன்னேற்றங்களைச் செய்யப்போறம் எண்டெல்லாம் சொல்லிச்சினம். கூட்டத்தில வலு காரசாரமான கதைகள் உடன தொடங்கிச்சுது காலங்காலமா மழகாலத்தில போக்கு வரத்து செய்யமுடியாம நாங்க கஸ்ரப்பட்ட காலங்கல்ல எட்டியும் பாராதவை இப்ப வந்து செய்யிறம் எண்டதை சனம் நம்பேல்ல ஆனா வாசிகசாலைத் தலைவர் எல்லாரையும் சமாதானப்படுத்தி ஒவ்வொருத்தரின்ரை கருத்தையும் சொல்லச் சொன்னார். அங்க வந்தவை சொல்லச் சொல்ல வாசிகசாலைத் தலைவர் அதை மட்டையில் எழுதி ஒரு பலகையில் குத்திக்கொண்டு வந்தார்.

நானும் கோயில் தொண்டர்சபைப் பொடியளும் றோட்டுவேலைகள், மழைத்தண்ணி ஓட றோட்டில மதகுகள், குடிக்க கிணறு அமைத்தல், முன்பள்ளிக்கட்டடம் கட்டுதல், வாசிகசாலைத் திருத்துதல் எண்டு பலதையும் சொன்னம். அங்க

வந்திருந்தவை வேற வேற வேலைகளையும் சொன்னவ. விவசாயிகள் சந்தையில இருக்கிற குறைபாடுகள், குப்பை கூழங்களை துப்பரவு செய்யிறது, மயானத்தில கிடக்கிற குறைகள், மலசலகூட வசதியற்ற குடும்பங்களின்ர பிரச்சினை எண்டு பலகை நிறைஞ்சு போட்டுது.

எனக்கு பாக்க வலு சந்தோசம் எங்கட குறை நிறைய இதுவரைக்கும் கவனிக்க ஆக்கள் இல்லையெண்டு குளறின எனக்கு அதைக்கேட்டு எழுதி வாங்க ஆக்கள் வந்திட்டினமே எண்டு.

கொஞ்சநேரத்தில அவையள் இதில எது எது முக்கியமான வேலைகள் எண்டு திரும்ப திரும்ப கேட்டினம். நாங்கள் நம்பேல்ல இவையள் தட்டிக் கழிக்கத்தான் இதுகளை கேக்கீனம் எண்டு எனக்கொரு டவுட்டு ஆத்திரத்தோட எழும்பிக் கேட்டன் பாருங்கோ கேள்வி... இவையெல்லாம் இப்பவே செய்யவேணும் காலங் கடத்திற வேலை செய்யப்படாது. நாங்கள் ஏழையள் வழியத்ததுகள் எண்டுபோட்டு நீங்க நினைச்ச மாதிரி செய்ய ஏலாது எண்டன்.

வந்தவை என்னச் சமாதானப்படுத்தி விளக்கமாக எல்லாம் சொல்லிச்சீனம். ஒருவேலை செய்யேக்க அது பலருக்கும் பயனளிக்கக்கூடியதாக எல்லோரும் ஏற்கக்கூடியதாக இருந்தா அதை முதல்ல செய்வம் அதையும் நீங்கள் தான் தீர்மானிக்க வேணும். நாங்க இல்ல, நீங்க எது முதல்ல எண்டு சொல்லுங்க... மற்றவையும் அதுக்கு ஓமெண்டா அத முதல்ல செய்வம் எண்டுச்சீனம். நான் றோட்டு வேலையை சொன்னன். பள்ளிக்கூடப் பிள்ளையள் படுகிற கஸ்டத்தைச் சொன்னன், கமக்காரர் படுகிற ஆக்கினையைச் சொன்னன். முழுக்க முழுக்க நான் சொன்னத எல்லாரும் ஏற்றுக்கொண்டினம். உண்மையைச் செல்லுறன் அண்டைக்கு தான் பெரிய மனுசர் எல்லாம் கூடி என்ர கதையைக் கேட்டு றோட்டு வேலைக்கு சம்மதிச்சது வலு சந்தோசம இருந்தது.

அண்டைக்கு சந்தைக்க நிக்கேக்க சந்திரன் சொன்னான் " அண்ண எங்கட றோட்டு திருத்தப் போகீனம் எண்டு அறிவிப்பு வந்திருக்கு எண்டு" உடன அந்த வீ.சி உத்தியோகத்தரிட்ட எங்கட பகுதி பொடியளைக் கூட்டிக்கொண்டு போய், வேலை தொடங்கிறத்துக்கு அந்தப்பகுதில செய்யவேண்டிய ஆரம்ப வேலைகள சிரமதான முறையில செய்து தாறம் எண்டு சொல்லிட்டு வந்தனான். ஓமோம் வார 13ம் திகதி சம்பிரதாய பூர்வமா வேலைகளைத் தொடங்கப்போறம். இப்பதான் எனக்கு நம்பிக்கை வந்திருக்கு. அதிகாரிகளும் நாங்களும் சேர்ந்து வேலை செய்தா எங்கட பகுதிய நாங்களே முன்னேற்றலாம் சரிதானே பாருங்கோ.

## சேர்ந்து செயற்படுவோம் வாரீர்

திரு.நா.மகேந்திரன், சனசமூக
அபிவிருத்தி உத்தியோகத்தர்

இந்துசமுத்திர நித்திலத்தின் கிரீடமாய்
வீற்றிருக்கும் வட மாகாணமே!
நீண்டகால உன் இருண்ட யுகத்திற்கு
ஒளி கொடுக்க வந்தது ஓர் திட்டம்
அதுவே உள்ளூர் சேவைகள்
மேம்பாட்டுத்திட்டம்

உன்னத சேவைகளை வழங்கிடும்
உள்ளூராட்சி
ஊக்கமுடன் மக்களையும் இணைத்து!
ஊரின் உண்மைத் தேவைகளை
உணர்ந்து!!
அபிவிருத்திகான தயாரித்திட்ட ஓர்
திட்டம்
அதுவே நெல்சிப் எனும் பெருந்திட்டம்

உலக வங்கி கை கொடுத்திட
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
நிதி ஒதுக்கிட
கௌரவ ஆளுநர் வழிகாட்டிட
உள்ளூராட்சி அமைச்சும்,
திணைக்களமும் உறுதுணையாய்
நிற்க
உள்ளூராட்சி மன்றங்கள்
முன்னெடுக்கும் திட்டம்

மக்கள் பங்களிப்பு எனும் தாரக
மந்திரம்
நீடித்த அபிவிருத்திக்கு வழிசமைக்க
அழகுபெறும் வீதிகள் பாரீர்
நல்ல குடிநீர் தாங்கிகள் பாரீர்
வசதிகள் நிறைந்த சந்தைகள் பாரீர்
கூடவே பல்பொருட் கூடங்கள் பாரீர்
கூடி விளையாடிட மைதானம் -
பெரியோர்
பொழுதினைக்கழித்திட பூங்காக்கள்
மீளாத்துயிலுக்கு அழகான
மயானங்கள் - என
அனைத்து சேவைகளும் மேம்பட
நல்லதொரு திட்டம் பாரீர்
சேர்ந்து செயற்படுவோம் வாரீர்



# உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள்

திரு.வ.மயில்வாகனம்,
வருமான மேற்பார்வையாளர்

உள்ளூராட்சி மன்றங்களானது உள்ளூர் மட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் அடிப்படை சேவைகளையும் மக்களுக்கு பயனுறும் வகையிலும் வழங்குவதில் பெருமளவு இடர்பாடுகளை எதிர்நோக்கி நிற்கின்றது. மக்களது அத்தியாவசிய தேவையான ஆயுர்வேத வைத்திய சாலைகள், குடிநீர் வழங்கல், சந்தைகள் போன்றவற்றுடன் வீதிகள் புனரமைப்பு, துப்பரவாக்கற் பணிகள் மற்றும் கழிவகற்றல் ஆகிய சேவை-களையும் நிறைவேற்றும் பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

மேற்படி வேலைகளை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் போது அதன் மூலம் மக்கள் பூரணமாக பயனடைகின்றனரா என்பது கேள்விக் குறியே. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டே உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

### மக்களது அத்தியாவசிய தேவைகள்.

மக்களது அத்தியாவசிய தேவைகளில் வைத்திய சேவை, குடிநீர், சந்தை என்பன முதன்மையானவை. வைத்திய சேவைகளைப் பார்த்தால் மக்களுக்கு பக்க விளைவுகளற்ற முறையில் தயாரிக்கப்படும் ஆயுர்வேத மூலிகை மருந்துகளை உள்ளூர் சபைகள் வழங்குகின்றன. இந்த சேவையானது முற்றிலும் இலவசமானது.

மக்கள் செறிவாக வாழ்கின்ற கடல் நீரேரிப் பிரதேசங்களில் பெரும்பாலான மக்கள் குடிநீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. இப்பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் குடிநீரை குழாய் மூலமும் நீர்த்தாங்கிகள் மூலமும் வழங்கி மக்களது அத்தியாவசிய தேவையான குடிநீர்ப் பிரச்சினைகளை ஓரளவு நிவர்த்திசெய்து வருகின்றது.

பொதுமக்கள் செறிவாக வாழ்கின்ற பகுதிகளில் சந்தைகள் அவசியமா-னவை. இதனால் விவசாயத்தை மேற்கொள்ளும் மக்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை இலகுவாக விநியோகிக்கவும் மக்கள் தமக்கு தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும் சந்தைகள் உதவுகின்றன.

### சனசமூக நிலையங்களோடு இணைந்த மக்கள் மேம்பாடுகள்

பிரதேச வளர்ச்சியில் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து சனசமூக நிலையங்கள்

செயற்படுவது இன்றியமையாததாகும். சமூக அபிவிருத்தி, பிரதேச வீதிகள் புனரமைத்தல், சிரமதான அடிப்படையில் வேலைகளை நிறை வேற்றல் மற்றும் பொதுமக்களை ஒன்றிணைத்தல் என்பனவாக இவற்றின் பணிகள் அமைகிறது. தனிமனிதன் தேவைகளை நிறைவேற்றுவதை விட சனசமூகங்களூடான மக்களுக்கான தேவைகளை அடையாளம் கண்டு செயற்படுத்தல் இலகுவானதாகவும் பயனுறும் வகையிலும் அமையும்.

**நகர பிரதேச வாழ் மக்கள் வரி செலுத்துதல்.**

பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகளை முன்னெடுக்கவும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவும் நிதி அவசியமானதாகும். எனவேதான் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வரி அறவிடுதலுக்கான சட்ட உரிமை வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தமது ஆதனங்களுக்கு, வர்த்தக செயற் பாடுகளுக்கு துவிச்சக்கர வண்டி மற்றும் நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு வரி செலுத்துவது அவசியமாகிறது.

வரிகளை அறவிடுவதற்கும், சேவை-களை முன்னெடுப்பதற்கும் மாநகர-சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என்பனவற்றிற்கு வெவ்வேறான சட்ட வரையறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் வரையறையோடு சகல வரிகளையும் அறவிட நியமத் துணைவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பெறும் சகல வருமானங்களும் பிரதேச மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளுக்கு செலவு செய்யப் படுகின்றது. இதற்கான அங்கீகாரம் மேற்படி சட்டங்கள் மூலம் சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக கருவறை முதல் கல்லறை வரை அனைத்து சேவைகளையும் மக்களுக்கு வழங்குவதுடன் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பிரதான பங்காளனாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டுவருகின்றன. சேவைகளை மேலும் மேம்படுத்தி மக்களுக்கு வழங்கவும் பிரதேசத்தினை அபிவிருத்திப்பாதையில் செலுத்திடவும் ஒவ்வொரு பிரதேசவாசியும் உரிய வரிகளை காலக்கிரமத்தில் செலுத்துவதன் மூலம் தமது பங்களிப்பினை வழங்க முடியும்.



# " உள்ளூராட்சியின் மாட்சி"

பிரதேச மேம்பாட்டைப் பேணிவரும் உள்ளூராட்சி
அறிவீரோ இதனாற்றல்; ஆகாகா இதன்மாட்சி;
தெருவீதி அமைப்புமுதல் தூயநீர் தருவழிகள்
சேவை வசதிகளை தந்திடுதல் இதன்பணியே;

ஊர்மனைகள், கட்டடங்கள் உறுவிதியை அனுசரித்து,
ஊடாடிக் காற்றோட உகந்ததாக கட்டிடவும்,
நீர்நிலைகள் மேன்மையுற்று; நன்நிலையைப் பேணிடவும்;
நலன்புரிந்தே தாய்சேய் நலவாழ்வு ஓங்கிடவும்;

நோயணுகா நிலைபேணி, நோய்பிணி சுகமளிக்க,
மூலிகை மருத்துவத்தை முறையாக அனுசரித்தே,
தூயசூழல் பேணிடவும், தொற்றுநோய் தொலைந்திடவும்
அந்திம காலத்தே ஆறும்நற் பூமியொடு;

நூலக சேவைகள்; வாசிப்பு வாய்ப்புக்கள்;
சனசமூக நிலையங்கள்; சந்தை பரிபாலனங்கள்;
பாலக வயதோர்க்குப் பள்ளியொடு பூங்காக்கள்;
படிப்போடு விளையாட்டு பங்கேற்று இளைப்பாற

திட்டமிட்டு பிரதேச வளஞ்சேர பலநூறு
பயன்பாட்டுச் சேவைபுரி ஊராட்சி முறையாலே
எட்டுமே நன்மைபல; வழங்கிடுவோம் பங்கேற்று
மக்களாட்சி வெளிப்பாடு; மன்றத்திலே உருவாகும்

உள்ளூர்வளம் பேணி ஊரின்தேவை நிறைவாக்கு;
உருவான ஊராட்சி; ஒற்றுமையே இதன்நோக்கு
உள்ளூராட்சி சேவைகளால் உருவாகும் மேம்பாடு;
உவந்திந்தப் பணிகளையே; ஒத்துழைத்தே பண்பாடு!

திரு.க.சௌந்தரராஜன்,
நூலகர்

## நாங்களும் ஒத்துழைக்க வேணும் (நாடகம்)

திரு.சி.தயாபரன்,
முகாமைத்துவ உதவியாளர்.

அந்த பகுதி பிரதேச சபைக்குட்பட்ட ஒரு பின்தங்கிய கிராமமாகும். பிரதேச சபை வாகனத்தில் ஒலிபெருக்கி ஊடாக ஊழியர் ஒருவர் அறிவித்தல் வழங்க அந்த வாகனம் ஜனசந்தடியான இடத்தில் நிறுத்தப்படுகின்றது. அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் என்று அனைவரும் வீடுகளில் இருக்கும் நாள்.

அறிவித்தல் ஆரம்பமாகிறது.

" அன்பான பொதுமக்களே, உங்கள் அனைவருக்கும் ஒரு அன்பான வேண்டுகோள்"

**குமரன்**: என்ன கத்துறாங்கள் "டெங்கு" நுளம்பு வரப்போகுது பத்தையை வெட்டுங்கோ எண்டு சொல்லப் போறாங்கள் போல.

**பாலன்**: உனக்கு எப்பவும் பகிடிதான். கொஞ்சம் பொறு, என்னெண்டு கேட்பம்.

**குமரன்**: சோலைவரிக்கு காசு கூட்டப்போறாங்களோ?

**பாலன்**: சத்தம் போடாதே என்னெண்டு கேட்க விடு. கேட்டாத்தானே என்னென்று தெரியும்.

**அறிவித்தல் தொடர்கின்றது**:

" உள்ளூராட்சி சேவைகளை மேம்படுத்தும் முகமாக உங்கள் பகுதியில் செய்ய வேண்டிய புனரமைப்பு வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு நாளை மாலை 4.00 மணிக்கு சி.த. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு ஜே.26, ஜே27., ஜே28., ஜே.29 கிராம சேவகர் பிரிவினைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இக்கூட்டத்துக்கு பிரதேச சபைச் செயலர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச சபை செயலாளர், உங்கள் பிரிவு கிராம சேவகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். என்பதை அறியத்தருகின்றோம்."

**குமரன்**: என்ன திட்டம் போடப்போயினம் வரிகளையேதும் கூட்டப் போயினம் போல

**பாலன்**: குறைசொல்லுறதே உன்ரவேலையாப் போச்சு.

**குமரன்**: நான் நாளைக்கு வரமாட்டன் நாளைக்கு எங்கட கோயில் கொடியேற்றம் நீ போட்டு வந்து சொல்லன்.

**பாலன்**: ஏன் உன்ர மனிசியை அனுப்பன்.

**குமரன்**: சீ. மனிசி அடியழிக்க வேணும் என்று சொன்னது. பெடியன்களும் சாமி காவுவாங்கள்.

**பாலன்**: என்ன 4.00 மணி வரைக்கும் காவிக்கொண்டு நிக்கப்போறீங்களோ

வரவிருப்பமெண்டா வரலாம் சும்மா சாட்டுசொல்லாத அண்ணை. சரி நேரம் போகுது போட்டுவாறன்.

**GS:** பாலன் உன்னை எங்கையெல்லாம் தேடுறது. இளம் பிறை சனசமூக நிலையச் செயலாளர் நீதானேடாப்பா.

**பாலன்:** ஓம் ஐயா நான் தான்

**GS:** நாளைக்கு 4.00 மணிக்கு சி.த. பாடசாலையில கூட்டமொன்று நடக்கப் போகுது.

**பாலன்:** ஸ்பீக்கரில சொல்லேக்க கேட்டனான்.

**GS:** நாளைக்கு வரேக்க எல்லா அங்கத்தவரையும் கூட்டிக்கொண்டு வரவேணும். மாதர்சங்க பொம்பிளை களையும் கட்டாயம் கூட்டி வரவேணும். மறந்திடாதே.

**பாலன்:** ஏன் பொம்பிளைகள் வரவேணும்

**GS:** பெண்களின் பிரசன்னம் முக்கியம் அவையின்ர திட்டத் தெரிவுகள் விருப்பு வெறுப்புக்களுக்கு முக்கியத் துவம் கொடுக்க வேணும்.

**பாலன்:** என்ன திட்டமென்று கொஞ்சம் சொல்லுங்கோவன் கேட்டாச்சொல்ல

**GS:** "**நெல்சிப்**"திட்டம் என்று சொல்லுறது இந்த திட்டம் முந்தியே வந்திட்டது பிரதேச செயலங்கள் வாயிலாகத்தான் செய்யச்சொல்லி வந்தது. நாங்கள் அனுப்பிய திட்டங்கள் சரியில்லை எண்டு திருப்பி அனுப்பிட்டங்கள். இப்ப எங்களையும் பிரதேச சபையும் உங்களையும் நேரடியாக இணைத்து சரியான தகவல்களை பொது மக்களிடமிருந்து நேரடியாகப்பெற்று அனுப்ப வேணும் எண்டு சொல்லிப்போட்டினம். அதான் நீங்க எல்லாரும் தவறாம வரணும் சரியே.

**பாலன்:** நாங்க வந்து என்ன செய்யவேணுமய்யா?

**GS:** அங்க வந்தா நீங்க தான் சகல வேலையையும் செய்யணும். அங்க வாருங்கோவன் சொல்லிவினம் தானே.

**பாலன்:** இந்த திட்டம் எத்தின வருசம் செல்லும்?

**GS:** உது நாலு வருச திட்டமாம். உலக வங்கிதான் அரவாசிக்காசை கடனாகத் தருது இலங்கை அரசாங்கம் மீதியை கொடுக்குது.

**பாலன்:** அப்ப இழுபறிதான் போல உந்த வேலை சரிப்பட்டு வராது.

**GS:** சீச்சி சீச்சி போட்ட திட்டங்கள் கட்டாயம் சரிவரும். இது நாங்க முந்தி செய்ற மாதிரி எங்களுக்கு தெரிஞ்சவைண்ட றோட்டுக்கும் வீட்டுக்கும் போட்டுக்கொடுக்கிற மாதிரி திட்டமில்ல. முழுக்க முழுக்க நீங்களே தயாரிச்சு நீங்களே தெரிவு செய்து உங்கட முடிவுடனயே இந்த திட்மெல்லாம் தெரிவு செய்யப்படும். இதுல தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு இடமில்லை சரியே.

**பாலன்:** நாங்க காசு ஏதும் கொடுக்க வேண்டி வருமா அய்யா?

**GS:** தேவைப்பட்டால் சிறிய பங்களிப்பு செய்ய வேண்டி வரும். காசாக் கொடுக்காட்டி பொருளாகவேணும்

கொடுக்கலாம். வேணுமண்டா சரீர உதவியும் செய்யலாம்.

**பாலன்:** சரீர உதவியண்டா எப்படி ஐயா?

**GS:** சரீர உதவியெண்டா உதாரணத்துக்கு, கல்லுகள் பறிச்சிருந்தா அதுகள குவிச்சு விடலாம். றோட்டுப் போடேக்க கல்லுகல பரவி விடலாம் கரை மண்ண வெட்டி அகற்றி விடலாம் இப்படி கணக்க செய்யலாம்.

**பாலன்:** சரி ஐயா

**GS:** கட்டாயம் மறக்காம பொம்பிளைகளையும் கூட்டிகொண்டு வாவன். உந்த திட்டத்திட்டத்திற்கு ஆண்களும் பெண்களும் சமமாக இருக்க வேணுமெண்டு விரும்பினம் சரியே அப்ப நான் வாறன்.

(அடுத்தநாள், பாடசாலை மண்டபத்தில் கூட்டம் அலை மோதியது, மாலை மணி 4.10 ற்கு ஐந்து நிமிட மௌன வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் தலைமை தாங்கிய கொத்தணியின் தலைவர் திரு.மதிசூடன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து பேசினார்.)

**மதிசூடன்**: இங்கே எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இந்த திட்டத்தை பற்றி நேரடியாக விடயத்திற்கு வரலாமென நினைக்கிறேன். இங்கே பலதரப்பட்ட மக்களும் வந்திருப்பதால் இந்த திட்டத்தை பற்றி சுருக்கமாக சொல்ல விரும்புறன். இந்த திட்டமானது வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் உள்ளூர் சேவை-களை மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் அனுசரணையுடனும் இலங்கை அரசாங்கமானது உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் இத்திட்டத்னை நடைமுறைப்படுத்து கின்றது. இதற்காக பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வளவு விரைவாக திட்டத்தினை தயாரித்து அனுப்புகின்றோமோ அவ்வளவு விரை வாக திட்டத்திற்கு அனுமதியும் நிதி உதவியும் கிடைக்கும். இதற்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்கி இங்கே நாம் சொல்லும் அனைத்து வேலைகளையும் விரைவாக நீங்கள் செய்து தர வேண்டும். இன்று பல வகைகளில் உங்களிடமிருந்து தரவுகளை பெறவுள்ளோம். எனவே அதனை மிக விரைவாக பூர்த்தி செய்து வழங்கவும். உங்கள் கேள்விகளுக்கென நேரம் ஒதுக்குவோம் அப்பொழுது நீங்கள் உங்கள் கேள்விகளை கேட்கலாம். குறிப்பாக பெண்கள் உங்கள் விருப்பங்களும் தெரிவுகளும் இத்திட்டத்திற்கு மிக முக்கியமானது. உங்கள் பகுதிகளில் உள்ள பிரச்சனைகள் எதுவானாலும் தெரிவிக்கலாம். நேரம் பொன்னானது. வீணாக கதைத்து உங்கள் நேரத்தை வீணடிக்காது விரைவாக ஒற்றுமையாக

முடிவுகளை எடுக்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.
எல்லோரும் தங்களுக்குள் கதைக்கிறார்கள்.

**தலைவர்**: எல்லோரும் கதைச்சு முடிஞ்சுதோ? உங்களுக்கு தந்த படிங்களை நிரப்பி இந்த அக்காட்ட கொடுங்க (பிரதேச சபை உத்தியோகத்தர்). எல்லாரும் வரிசை யாக வாருங்கோ உங்களுக்கு மூன்று நிறத்தில ஸ்ரிக்கர் தருவம் உங்களுக்கு முக்கியமாக தெரிகின்ற மூன்று வேலைகளுக்கு முக்கியத் துவத்தின் அடிப்படையில் ஒட்டவேணும் விளங்குதோ.

(எல்லோரும் முட்டி மோதி வரிசைக்கு வருகினறனர்)

**வந்தவர்களில் ஒருவர்**: எங்க போனாலும் கியூ வரிசையில நிக்கிற வேலைதான் எங்களுக்கு.

**தலைவர்**: சரி சரி நெருக்குப்படாம நிண்டு ஸ்ரிக்கர ஒட்டுங்கோ ஏலாதவைக்கு மற்றவ உதவி செய்யுங்கோ. ஒட்டினவ மற்றவைக்கு வழி விடுங்கோ இல்லாட்டி மாறி உங்கட முதுகுல ஒட்டிப்போடிவினம்.

(எல்லோரும் சிரிக்கினம்)

**தலைவர்:** இந்த வேலை முடிஞ்சா ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவி லிருந்து ஒரு பெண்ணும் ஆணும் வாங்கோ என்ன விசயம் என்டா உங்கட பிரிவிக்குள வரும் வீதிகள் முக்கியமான இடங்கள் குறித்துத்தர வேணும். வடிவா கீறத்தெரிந்த பிள்ளைகள் வந்தா நல்லம்.

(சில பெண் பிள்ளைகள் மற்றவைகள் சொல்லச் சொல்ல படங்களை கீறுகின்றனர்)

**தலைவர்**: கீறி முடிச்சா அப்படியே மேசைல விட்டுட்டு வாங்கோ இன்னும் நிறைய வேலை இருக்குது.

போட்டில வென்வரிப்படம் ஒன்று உள்ளது. இதில உங்களுக்கு உதவி செய்கின்ற அரச மற்றும் அரசு சாராத நிறுவனங்களை அவை உங்களுக்கு உதவும் அளவைக்கொண்டு குறிப்பிடுங்கோ. பெண்கள் இதில் அதிகம் அக்கறை எடுங்கோ ஏனென்றால் சமூகத்தில பெண்களுக்கான உதவிகள் அதிகம். இந்த வேலையும் ஓரளவுக்கு திருப்தியாக முடிகின்றது.

**தலைவர்**: சரி இப்ப உங்கட கேள்வி நேரம். நேரமும் போகிற படியால் குழப்பாமல் ஒவ்வொருத்தராக கேழுங்கோ.

முதலாவதாக **மாதர்சங்க தலைவி**: எங்கட ஒழுங்கை மழை காலத்தில குளம் போல தண்ணி நிற்குது. போய்வாரது சரியான கஸ்டம். எல்லாரும் சுத்தி மதில கட்டினதால வெள்ளம் ஓட இடமில்லாமல் ஒழுங்கைக்குள்ளேயே தேங்கி நிற்குது. கடைசியாக தார் போட்டு ரோட்டு போட்டது 30 வருஷத்திற்கு முந்தி. இந்த திட்டத்தில இதற்கு முன்னுரிமை கொடுத்து கல்லுப்போட்டு ரோட்டை உயர்த்தி தார் ரோட்டாக மாத்தி தாருங்கோ.

**தலைவர்**: உங்கட ரோட் எது?



**மற்றவர்**: யாவில் மேற்கில இருக்கிற காளி கோவிலடி வீதி

**தலைவர்**: உங்கட பிரிவில இத முன்னுரிமைப்படுத்தி போட்டில ஒட்டினீங்களா அம்மா?

**மற்றவர்**: ஓம் கனபேர் ஒட்டினவை.

**தலைவர்**: அப்படியென்டா அதை கவனிப்பம்.

ஜே/28இருந்து

**ஒருவர்**: ஐயா எங்கடை ஒழுங்கை திருத்தி 10 வருடத்துக்கு மேல ஆச்சு நாங்கள் கடிதம் எழுதியும் நேரில வந்து கதைச்சும் சரிவரல்ல ஒரே குண்டும்குழியுமாய் கிடக்கு நாங்கள் எல்லாரும் சேர்ந்து கிறசர் மண்பறிச்சுப் போட்டும் சரிவரல்ல இந்த திட்டத்தின் மூலமென்டாலும் வடிவாப்போட்டுத் தாங்க.

**தலைவர்:** உங்கட ஒழுங்கைக்கள்ள எத்தனை குடும்பம் இருக்குது அம்மா?

**மற்றவர்:** கிட்டத்தட்ட 20 வீட்டிற்கு மேலே இருக்குது.

**தலைவர்:** சரிஅப்ப திட்டத்தில போட்டு அனுப்புவம். அடுத்தது யார்?

ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் எழுந்து நின்று கேட்கின்றார்,

**ஆசிரியர்**: கதைக்கிறண்டு தம்பி குறை நினைக்க வேண்டாம். எங்கட வீட்டிற்க பக்கத்தில வெறும் வளவு அந்த வளவுகாரர் வெளிநாட்டில இருக்கினம். உள்ளநாட்டு குப்பையெல்லாம் கோழிச்செட்டை தொடக்கம் பிளாஸ்ரிக் கழிவுகள் வரை கொட்டப்படுறது. அக்கம் பக்கம் நாற்றம் தாங்கேலாம இருக்குது. இந்த வளவை பார்க்க இருக்கிறவை வந்து ஒழுங்காக தேங்காய மட்டும் பிடிங்கிக்கொண்டு போவினம். வளவின் சுத்தம் பற்றி அக்கறைப்படுவதில்லை.

**தலைவர்:** அந்த வளவுக்காரரின்ரை பெயரையும் பார்க்கிறவையின்ர பெயர் விலாசத்தையும் தாருங்கோ நாங்க பிரதேச சபை மூலம் நடவடிக்கை எடுப்பம். இப்ப டெங்கு நுளம்பு தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்களும், பொலீசும் இணைந்து நடவடிக்கை எடுக்கினம். அதால இந்த காணி விடயத்தை இதுக்கால கவனிப்பம்.

**ஆசிரியர்**: நன்றி தம்பி ஒருக்கா இத கவனியுங்கோ. நாங்க சொன்னா கணக்கெடுக்காயினம். நீங்க தான் கவனிக்க வேண்டும்.

**தலைவர்:** சரி நேரம் போற படியா இத்தோட முடிப்பம் வேறேதும் இருந்தா உங்கட பிரிவு பிரதிநிதி மூலம் தெரிவியுங்கோ நன்றி வணக்கம்.

(உள்ளூராட்சி மன்ற அலுவலகத்தில் செயலாளர் மற்றும் உத்தியோகத் தர்களுடான கலந்துரையாடல் நடை பெறுகின்றது செயலாளர் உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிடையே குறுக்குநடை பற்றிய விளக்கம் அளிக்கிறார்.
குறுக்கு நடைக்கு உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பிரதேசம் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன.)

(சில நாட்களின் பின் ஜே/27 கிராம சேவகர் பிரிவிலிருந்து ஒரு வீதி வேலை தொடர்பாக சிலர் செயலாளருடன் பேச வந்திருக் கின்றார்கள்).

**செயலாளர்:** வாருங்கோ என்ன பிரச்சனை இருங்கோ
**வந்தவர்களில் ஒருவர்:** ஐயா! நாங்கள் ஜே/27 கிராம சேவகர் பிரிவு முதலி வீதியில் இருக்கின்றனாங்கள். நான் தொழிநுட்ப உத்தியோகத்தராக கட்டத்தினைக்களத்தில் வேலை பார்க்கின்றேன். எங்கட ஒழுங்கை நெல்சிப் திட்டத்தில் திருத்தப் போயினம். ஒழுங்கை எல்லாம் கல்லுப்பறித்து கியூப் கட்டமாமல் சிதறிக்கிடக்கின்றது. அதோட வேலி யல ஒரு அடி தள்ளி பின்னுக்கு போடச்சொல்லினம் குழப்பமாக இருக்கு அதுதான் கதைப்பம் எண்டு வந்தனாங்கள்.

**செயலாளர்:** எல்லாரும் நெல்சிப் கூட்டத்திற்கு வந்தனியல் தானே அங்க என்ன சொல்லப்பட்டதென்று தெரியும் தானே இது மக்களுக்கான திட்டம் இதில் மக்களின் பிரசன்னம் மக்களின் பங்களிப்பு ஒத்துழைப்புத்தான் மிக முக்கியம் இது நீங்க பாவிக்கிற பாதை விட்டுக்கொடுப்புகள் சேர்ந்து பங்களிப்பு செய்வது நல்லது தானே கல்லுகளை பரவியிருந்தால் நீங்கள் அதை ஒரு ஓரமாக குவித்து போய்வாறத்துக்கு உதவி செய்யலாம். வேலை செய்யும் ஒப்பந்தக்காரர் கல்லு முழுக்க பறித்த பின்தான் கியூப் கட்ட வருவினம். அதால சில நாட்கள் பிரச்சினையாக இருக்கும். இதற்கு உங்கட ஒத்துழைப்பும் தேவை.
**வந்தவர்களில் ஒருவர்:** சரி ஐயா எங்களால முடிந்தளவுக்கு கல்லுகளை ஒதுக்கி ஒத்துழைக்கிறம் நீங்களும் வேலையை தாமதிக்காமல் செய்து முடிச்சு உதவி செய்யுங்கோ.
**செயலாளர்:** திட்டத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட கால அளவுக்குள் வேலையை நிறைவு செய்வம்.
**வந்தவர்கள்:** சரி ஐயா நன்றி நாங்க போட்டுவாறம்.
வந்தவர்கள் தங்களுக்குள்ளேயே "நாங்களும் அவசரப்படாமல கொஞ்சம் ஒத்துழைக்கத்தான் வேணும். அவைக்கும் (உள்ளூராட்சி மன்றம்) வேலையை முடிக்க காலமும் தேவைதானே. கூட்டத்தில சொன்னபடி வேலையை கெதியாக தொடங்கி விட்டினம். உண்மையில நாங்க

நினைச்சது உது எங்க நடக்கப்போகுது எண்டு ஆனா சொன்னபடி வேலை தொடங்கிட்டுது. இப்படி எல்லா வேலைகளையும் தொடங்கி முடித்தால் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் வெற்றியாக முழுமைபெறும் என்று சனத்திற்கும் நம்பிக்கையும் வரும்" என்றபடி செல்கின்றனர்.

முற்றும்.



## " நூல் போற்றுதும் நூலகம் போற்றுதும்"

*அறிவை வளர்த்திட அனுதினமும்*
*அரிய நூல்களை ஆர்வத்துடன்*
*அனைவரும் படித்திடுவோம் -*
*அக இருள் நீக்கிடுவோம் -*
*ஊக்கம்பெற உதவிடுமாம்*
*உயர்ந்திடவே துணைதருமாம்*
*ஆக்கம் தரும் அறிவு நூல்களை*
*நூலகத்தே கற்றிடுவோம்.*
*நுண்ணறிவால் உயர்ந்திடுவோம்*
*நாடுவளம் பெற தேவை*
*நல்லவர் வல்லவரை —*
*நலம்நாடும் கற்றவரை*
*உருவாக்கிட உதவுவதே*
*நல்ல நூலகம்*
*உறுதுணையாய் அதை கொள்தினமே!*

*கு.றமிக்கா*
*உடுவில்*

---

## புத்தகசாலை வேண்டும் புதுவாழ்வு காண

*நூலகஞ் சென்றிடுவோம்*
*நூல்கள் பல கற்றிடுவோம்*
*அறிவு தன்னை பெற்றிடுவோம்*
*அறிஞராக மலர்ந்திடுவோம்*

*நூலகச் சோலையிலே*
*பூத்த பூக்கள் புத்தகங்கள்*
*பூக்களின் மலர்வினாலே*
*பிறந்தது எமக்கு வாழ்வு*

*கல்விச் செழுஞ்சுடரை*
*கற்றறிய உதவுவது நூலகமே*
*கதியற்ற மனிதனவன்*
*கண்களை திறப்பது நூலகமே*

*அறிவென்னும் நிதியத்தை. —*
*அள்ளித் தருவாய் நூலகமே*
*அருமருந்தாய் விளங்குகின்றாய்*
*அறிவமுதை ஊட்டும் அன்னைநீயே*

*ஜெயரத்தினம் கீர்த்தனா*
*சுன்னாகம்*

**உள்ளூராட்சிமன்ற மாநாடும் கண்காட்சியும் - 2009ம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற உத்தியோக த்தர்களிடையே நடைபெற்ற போடிட்டியில் பரிசுபெற்ற சிறுகதை.**

## தெளிவு பிறக்கிறது.

நீண்ட காலமாக மனதுக்குள உறுத்திக்கொண்டிருந்த ஏதோ ஒன்று கழன்றது போல் இலேசாகின்றான் சுகன். கனம் குறைந்த அவனது மனதில் தன் ஞாபகத்தில் பொதிந்த பழைய நினைவுகள் பசுமரத்தாணி போல் பச்சென்று பற்றத்தொடகின ஆம் அவன் கல்லூரி கற்றல் முடித்த பின்னர் சில கால இடைவெளியில் தனத வாழிவிற்கு பெரிதும் உதவுமென கருதிய ஆங்கிலம், தொழஜல் நுட்பக் கல்லூரியில் சில கற்கை நெறிகள் என்றெல்லாம் படித்தான். ஆவற்றில் சிலதில் சித்தியும் எய்தினான். அவ்வப்போது வர்த்தமானியையும் புதினப்பத்திரிகையையும் தனக்கொரு தொழிலுக்கு எங்காவது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றனவா என கண்கலால் துலாவுவான். அவ்வப்போது ஏதும் கண்டுவிட்டால் அந்தக்கணமே விண்ணப்பங்கள் அனுப்பும் முயற்சியில் இறங்குவான். சில விண்ணப்பங்களோடு கதை முடிந்தன. புல மன அழுத்தங்களை கடந்து கிடைத்தது தான் மாகாண பொது முகாமை உதவியாளர் சேவை வகுப்பு III இம்முறை போட்டிப்பரீட்சையில் வழமையான மட்டு மட்டான நிலை அல்ல. மாறாக மாவட்ட நிலையில் பதினொராவது இடம் இப்போது அவன் முன்னை வினை ஒரு பகுதி தீர்ந்தன என எண்ணினான். புதினத்தாளில் வந்த பட்டியலிலும் அவனது பெயர் இடம்பெற்றிருந்தது.

இனி அடுத்த கட்டம் அலுவலகம் செல்வது தான் குறிப்பிட்ட நியமனக்கடிதம் வந்தால் சரி அதுவும் எதிர்பாராதது போல் தீடிரென விரைவாக வந்தது. தபாற்காரன் மணியடித்து கடிதத்தை நீட்டும் போதே வெளியமைப்பைப் பார்த்ததும் இது நியமனக்கடிதமாகவே இருக்கும் என்பதை ஊகித்துக்கொண்டான். உத்தியோகம் புருஷலட்சணம் என்பார்கள். கடிதம் பிரிக்கும் முன்னே குசினியால் எட்டிப்பார்த்த தாய் “வேலைக்கு கடிதம் வந்திருக்குது போல எங்கே இடம் போட்டிருக்கினம்” என வினாவினாள். அம்மா எனக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு பணிக்கப்படு கின்றீர்கள். என கடிதத்தை வாசித்து சுகன் மிக விரைவாக ஆவலுடன் இடத்தைத் தேடி மறுபக்கத்தில் உள்ள “யாழ்ப்பாணம் மாநகர சபை

திரு.சீ.மனோகரன்
முகாமைத்துவ உதவியாளர்

என்றதையும் வாசித்து தாயின் ஆவலுக்கு விடையை பகிர்ந்தான்.

நியமனக் கடிதத்தில் ஆழ்ந்திருந்தவன் அதிலிருந்து மீண்டு வேலையின் தன்மை எப்படியிருக்கும். எவ்வாறு தான் கடமையாற்றவேண்டியிருக்கும் என்றெல்லாம் பலவாறு சிந்தித்தான் அப்போது பள்ளி முடித்த பின்னர் ஆசிரிய போட்டிப் பரீட்சைக்காக பிரத்தியேக வகுப்பொன்றில் ஒரு நல்லாசான் நகைச்சுவையுடன் சொல்லிய கருத்துமிக்க வசனங்கள் சில அவன் ஞாபகத்தில் படரத்தொடங்கியது." பிள்ளைகளே உங்களில் சிலராவது ஆசிரியர்களாக வரவீர்கள். உண்மையில் இது ஒரு தெய்வீக புஜீசனை நீங்கள் புஜீசாரி பிள்ளைகள் மெய்யுருகி வணங்கும் மெய்யடியார்கள் உங்கள் புஜீசனை நன்றாக அமைய வேண்டும். அப்போது தான் அடியவர்கள் நோக்கம் நிறைவேறும். பாடசாலையில் நீங்கள் நித்திரை செய்தால் பெரியவன் கடவுள் தண்டனை தருவான். உங்க பாருங்கள் சில பாடசாலைகளில் நாய்கள் படுத்துக்கிடக்கின்றன. ஏனென்று நினைக்கிறீர்கள்? அவையெல்லாம் அங்கு படிப்பித்த வாத்திமார்தான் இப்ப அவை நாயாய் பிறந்து படிப்பித்த காலத்தில் நித்திரை செய்ததால் இப்ப அவை நாயாய் பிறந்து பாடசாலைகளில் படுத்து வினை போக்கினம். மேலும் பாடசாலைகளின் பெயர்களும் வித்தியாலயம் என்று கருத்துள்ள பெயராக அமைகிறது. அதாவது வித்தையை கற்பிக்கும் ஆலயம் என பெயர் பெறுகின்றது. இவ்வாறே வேறு உத்தியோகம் கிடைத்தாலும் இது பொருத்தமாக அமைகின்றது. காரியாலயமும் காரியம் நடைபெறும். ஆரயம் உத்தியோகம் உத்தி, யோகம், யோகம் என்பது வழிபாட்டு முறை எனவே நீங்கள் தொழிலாற்றும் காரியாலயம் எல்லாம் ஆலயங்களைப் போல புனிதமாக தொழில்பட வேண்டிய இடங்கள் செய்யும் தொழிலே தெய்வம் என்பதை மறக்கக் கூடாது கடமை செய்யாது நித்திரை செய்தால் பின்னர் நாயாகத்தான் பிறக்கவேண்டியிருக்கும். கவனம்" இவ்வாறு உணர்வு மேலோங்க மாநகர வேலை வென மனதில் அலசினான்.

தான் கல்லூரிக்க போகும் காலத்தில் எங்குள்ளதென்பதை கண்டிருந்தான். அதைவிட குப்பை ஏற்றும் கைவண்டிலகள், பெரியசில்லு உழவு இயந்திரங்கள் நாய்பிடிக்கும் வண்டில்கள் என்பவற்றில் "மாநகர சபை" என பொறிக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளான். மேலும் "மாநகர சபை" என பெயர் பொறிக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளான். மேலும் மாநகர சபைதான் யாழ்நகரப் பகுதியில் உள்ளவர்களுக்கு நீர்விநியோகம் செய்வதாக கேள்விப்பட்டது. முன்னர் அப்பகுதிக்க மின்சாரம்

வழங்குவதற்கும் அதுதான் பொறுப்பாயிருந்ததாம். ஆதைவிட பெரிதாய் வேறொன்றும் தெரியாது பள்ளிம் பருவத்தில் நண்பர்கள் அளவளாவும் போது சிலவேளைகளில் "மச்சான் நாங்கள் பாடசாலை முடிஞ்ச பின் ஏதாவது வேலை பார்ப்பம் தானே, கடைசி முனிசிப்பலில்ல (Municipal) ஆவது ஏதும் வேலை கிடைக்கும் தானே என்று சொல்லி சிரிப்பதும் ஞாபகம் வந்தது. " அப்ப மாநகர சபையில அப்பிடிப்பட்ட வேலைதான் செய்யிறதோ' இப்படி ஒரு புதிய எண்ணப்புற்று அவன் மனதில் உருவானது. ஏன்றாலும் வேலைகிடைத்த சந்தோசம் மேலோங்கியதால் அதைப்பற்றி அவன் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

அன்று மாலை நண்பர்களுடன் அளவளாவும் போது . அவர்கள் "மச்சான் உனக்கு வேலை கிடைத்து விட்டதாம் சந்தோசம் எங்கே இடம் வந்திருக்கு. நாங்களும் அங்கினேக்கில ஏதும் தேவையெண்டு வந்தால் உதவி செய்வாய் தானே பிறகு மற்றப்பக்கம் பார்த்தக்கொண்டிருந்திடாதே' என வழமையான நட்புத்தொனியிலே கேட்க சுருக்கமாக "யாழ் மாநகர சபை என விடை பகிர்ந்தான். அப்போது ஒருத்தன் "அது தானே மச்சான் நாய் பிடிக்கிற வேலை குப்பை கூட்டுறகிற வேலையெல்லாம் செய்கிறது. இப்ப மகிந் சிந்தனையில நாய் பிடிக்கிற அழிக்கக் கூடாதாக்கும அங்க போய் நீ என்ன செய்யப் போறாய்? ஏன்றான். குறும்புத்தனம் மிக்க இன்னொருவன "மச்சான் முந்தி அழிக்கிற நாய்களின் வாலை எண்ணித்தான் நாய்பிடிகாரரின் சம்பளம் கொடக்கிறவை இப்ப நான் நினைக்கிறன் கருத்தடை ஊசி போடுற நாய்களின்ர வால்களை வெட்டி வருவினமாக்கும். அவற்றை எண்ணித்தான் சம்பளம் கொடுப்பினம் சில வேளை உப்பிடிப்பட்ட வேலையும் உனக்கு வரலா" என தனது அகச்சிரிப்பை வெளிக்காட்டாது நாசுக்காக. கூறினான். இப்படி தத்தம் கற்பனைகள் எண்ணங்களையெல்லாம் நண்பர்கள் அளந்தார்கள்.

முன்னர் சுகனின் மனதில் முளைவிட்ட புற்று இப்போது சற்று வளர்ந்துவிட்டது. சரி எப்படியெண்டாலும் வேலைக்கு சென்று முதல் நாள் கடமையைப் பொறுப்பேற்பது. பிறகு போகப் போக தெரியும் தானே பார்ப்பம் என்ற எண்ணத்துடன் முதல்நாள் உத்தியோகத்துக்கு சென்றான். அங்கு மாநகரசபை வளவினுள் நுளைந்த பின்னர்தான் அங்கு பலதரப்பட்ட வேலைகள் பல பிரிவுகளுடாக நடைபெறுகின்றன என்ற உண்மை சாதுவாக விளங்கியது. இது இவ்வாறிருக்க ஊரிலுள்ள ஓய்வுபெற்றோர் சிலர் கதைக்கும் போது 'தம்பி லோக்கல் கவர்மென்டிலையோ (Local Govt) வேலை செய்யுறீர்" என வித்தியாசமான எண்ணத்துடன்

கேட்பார்கள். இப்படிப்பட்ட ஒருவர் "முந்தி உந்த V.C களுக்கெல்லாம் அப்பப்ப இருக்கற சியாமன்மார் (Chairman) தங்களுக்கு தெரிஞ்ச ஆக்களை தூக்கி வேலைக்கு போடுறது. இப்ப உங்க இருக்கிற பெரியாகடகளிலே சிலர் அப்படி வந்நவையள்தான்" என்றார். இன்னொருவர் " எங்கடை உந்த V.C இலே என்ர குஞ்சியப்பு Chairman ஆக இருந்தவர். அம்மான் வட்டார உறுப்பினராக இருந்தவர். எனக்கு அப்ப உதில வேலை தாறதெண்டு சொன்னவை நான்தான் மாட்டன் எண்டிப்போட்டன்' என்றார். இப்படி வயசுக்கேற்ப அறளை பெயர்ந்தவர்கள் போல கதைத்தார்கள். என்ன செய்வது அவர்களின் பொழுபோக வேணுமே! குதைத்தாலும் பரவாயில்லை இடைக்கிடை சந்தர்ப்பம் வரும் போது சாடையாக அவனது பெற்றோரிடமும் அப்படி இப்படி ஏதும் சொல்லியிருப்பார்கள். இப்படிபட்ட வேளைகளில் சுகனின் உள்ளத்தில் எற்கனவே அரும்பியிருந்த புற்று மீண்டும் வளர்வது போன்ற தாக்கத்தை ஏற்ாடுத்தியது.

தொழில்ரீதியாக அதிக அனுபவம் தொழிலாற்றும் திணைக்களம் பற்றிய நிறைவான அறிவு என்பன தெளிவாக இல்லாதபடியாலும் அவனது மனம் ஊசலாடத்தான் செய்தது. வேலையும் பதியது தனக்கு வழங்கப்பட்ட கடமைகளை சரிவர செய்யவேண்டும் டின்ற எண்ணத்திலேயே கடமையைச் செய்தான். அலுவலகத்தில் மூத்த உத்தியோகர்களுடன் இவைபற்றி பகிர்ந்து தெளிவு பெற அவனுக்கு நேர அவகாசம் கிடைக்கவில்லை. புகுமுகப் பயிற்சிகள் வழங்கப்பட்டபோதும் அவை அலுவலக நடைமுறை, தாபனவிதி, நிதிப்பிரமாணம் என்பன பற்றி எல்லா அலுவலகர்களுக்கும் பொதுவானதாக இருந்ததேயன்றி உள்ளூராட்சி திணைக்களம் சார்ந்தாக அமைந்திருக்கவில்லை. எனவே தொழில்பற்றி யாரும் கதைத்தால் " யாழ் மாநகர சபையில முகாமை உதவியாளராக பணியாற்றுகின்றேன் எனக்கூறிவிட்டு பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. ஆனால் அவனுக்கு ஏற்கனவே வேரூன்றப்பட்டு பிறரது தாக்கத்தால் நீருற்றப்பட்டு வளர்ந்த அகக்களைகளை இக்கொள்கையால் அகற்ற முடியவில்லை அது இடையிடையே படர்ந்திருப்பதை அவனால் மறுக்கவும் முடியவில்லை. அவனுக்கு ஒரு விழுதாக நிற்பது அவன் தன் கடமையை சரிவர செய்வது தான். திருமணப்பருவத்தில் இருக்கும் சுகனுக்க அவன் வேலைபார்க்கும் இடம் அவனது வாழ்க்கைப் பிரச்சனையிலம் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாக அவனது பெற்றோர் தப்புக்கணக்க போட்டிருந்தார்கள். தாய் ஒரு நாள் மகனின் மனதை

நோகாதபடி தம்பி நீ வேற கந்தோருக்கு மாற ஏலாதோ அப்படி மாறினா நல்லதெண்டு நினைக்கிறன் என்றாள். ஓம் அம்மா எனக்கும் அப்படியொர விருப்பம் இருக்க ஆனால் இப்பொதைக்கு சாத்தியமில்லை. ஏனென்றால் நியமனக் கடிதத்தில மூன்று வரு'ங்களுக்கு தகதிகாண் நிலையில இருக்கிறம் இந்தக்காலத்தில் பொதவாய் இடமாற்றம் செய்யிறதில்லை என்றான். தாயார் தகுதி காண் காலமெண்டால் என்ன தம்பி எனக் கேட்டாள். புதிதாக ஒரு வேலைக்கு சேருகிறவரின் வேலை, நடத்தை வரவு என்பன திருப்தியாக இருப்பதனை அவதானிப்பதற்கும் அவர் அவ் வேலைக்கு தகுதி உள்ளவரா என்பதை தீர்மானிப்பதற்கும் உரிய காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியை அவதானித்தே மேலதிகாரி நியமனத்தை உறுதிசெய்ய நடவடிக்கை மேற்கொள்வார். எங்கட கந்தோரைப் பொறுத்தவரையில் என்ர மேலதிகாரி என்ர வேலையில் திருப்தி ப்படுகிறார் என்பது எனக்கு தெரியும் என்றான் சுகன். தாய் விடவில்லை "அதற்கு பிறகு மாற்றம் மாற்றம் எடுக்கலாமோ என்றால்" என்றால். "அதற்கு பிறகு வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் ஆனால் நான் கோருகிற ஆளனி வெற்றிடம் இருக்க வேண்டும். மேலும் இடமாற்ற சபை தான் இடமாற்றம் பற்றிய முடிவுகளை எடுக்கும். கட்டாயம் நாங்கள் கேட்ட இடத்திற்க தான் தருவினம் என்று இல்லை" படித்தவற்றில் சிலவற்றை தாய்க்கு விளக்கினான். தாய்க்கு பாதி புரிந்தும் பாதி புரியாமலும் இருந்தது. அத்துடன் நிறுத்தி விட்டாள். இவவிதமமாக அகத்தில் சில விசனங்களுடன் சுகனது ஆரம்ப உத்தியோக காலம் நகர்ந்தது.

இன்று ஞாயிற்று கிழமை விடுமுறை. வழமையாக காலை 5மணிக்கு எழும்புகிறவன் அழுப்புக்காரணமாக கூடுதல் நேரம் படுக்கையில் கிடந்தான். பிள்ளையார் கோவில் மணி ஓசை கேட்டதும் நேரம் எழுந்து காலைக்கடன் முடித்து குளித்து கோவில் சென்று வழிபட்டான். காலை உணவு உண்ட பின் தன் பள்ளித்தோழன் கஜனின் வீட்டிற்கு சென்றான். அங்கு கஜன் இல்லாததால் கஜனின் தந்தையுடன் கதைக்கும் படி ஆகியது அவர், தம்பிக்கு உத்தியோம் கிடைத்த பிறகு இப்பதான் காணக்கூடியதாக இடக்குது என கதைக்க ஆரம்பித்தார். தனது பழைய அனுபங்களை சுகனுடன் பகிர்ந்து கொண்டார்.


உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம்
குடிநீர் வழங்கல்
சிறிய குளங்கள் புனரமைப்பு
வடிகால்கள்
பொருளாதார செயற்பாடுகள்
வீதிகள்
பொதுத்துறை கட்டடங்கள்
வீதி விளக்குகள்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
வடமாகாண சபை
உள்ளூராட்சி சபைகள்
வெளியீடு
உள்ளூராட்சி முகாமைத்துவக் குழு
வடமாகாணம்